IN THE COURT OF THE SUBORDINATE COURT, VANDAVASI
CASE NO: OS.41/2024
DEPOSITION OF WITNESS: PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | மாணிக்கம் | | : | |
| Father's/Husband's Name தந்தை/கணவர் பெயர் | : | கோபால் | Calling/ தொழில் | : | |
| Village/கிராமம் | : | கொண்டையாங்குப்பம் | | : | |
| Taluk/தாலுக்கா | : | வந்தவாசி | Age/வயது | : | 48 |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 25th day of June 2025.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் கொண்டையாங்குப்பம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் வழக்கின் 2ம் வாதி ஆவேன். பிரதிவாதியை தெரியும். முதல் விசாரணைக்காக கூடுதல் சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**வாதி தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்கள்**

1. 25.01.1975 தேதியிட்ட செந்தாமரை அம்மாள் 2ம் பிரதிவாதி நடேச கவுண்டருக்கு தாவா சர்வே எண்ணில் 19 3/4 சென்டை கிரையம் செய்ததற்கான கிரையப்பத்திர சான்று நகல் ஆவண எண்.78/1975 வா.சா.ஆ.10 ஆகும்.
2. 17.09.1991 தேதியிட்ட செந்தாமரை அம்மாள் 2ம் பிரதிவாதி நடேச கவுண்டருக்கு தாவா சர்வே எண்ணில் 3 சென்டை கிரையம் செய்ததற்கான கிரையப்பத்திர சான்று நகல் ஆவண எண்.198/1992 வா.சா.ஆ.11 ஆகும்.
3. 07.08.1996 தேதியிட்ட 2ம் பிரதிவாதி நடேச கவுண்டர் மற்றும் அவரது சகோதரர்களுக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திர சான்று நகல் ஆவண எண்.719/1996 வா.சா.ஆ.12 ஆகும்.

4. தாவா சொத்து குறித்த சிட்டா நகல் (1390 பசலிக்குரியது) தலைமையிடத்து துணை வட்டாட்சியர் வழங்கியது வா.சா.ஆ.13 ஆகும்.

எனவே, பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டது**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2025.06.25 18:15:40 +0530

சார்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.